தினமலர்
உண்மையின் உரைகல்

உலக தமிழர் செய்திகள்

ஏப்ரல் 25,2012 IST

# சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க கருத்தரங்கு



சிங்கப்பூர்: திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), "சிங்கப்பூரில் சொந்தத் தொழில் துவங்குவது எப்படி?" என்ற தலைப்பில் பொதுமக்களுக்கான இலவச தொழில் முனைப்பு கருத்தரங்கை பீட்டி சாலையில் அமைந்துள்ள சிண்டா தலைமையகம் அரங்கத்தில் நடத்தியது.சிங்கப்பூர் இந்திய வர்த்தகத் தொழிற்சபையின் தலைவர் ஆர். நாராயணமோகன், கருத்தரங்கை நடத்தினார். லிட்டில் இந்திய வர்த்தகர் மற்றும் மரபுடைமைச் சங்கத்தின் தலைவர், ராஜகுமார் சந்திரா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தன் தொழில் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். இக்கருத்தரங்கை நிக்சன் செல்வராஜ் துவங்கி வைத்தார். சங்கப் பொருளாளர் ஹிதாயதுல்லா நினைவுப்பரிசுகளை வழங்கினார். சங்கத் துணைப் பொருளாளர் கலந்தர் மொஹிதீன் நன்றி கூறினார்.